# கத்தோலிக்கர்களாகிய நாம் திருவிவிலியத்தை இன்று எப்படி பொருள்விளக்கம் கொள்கின்றோம்?

கீழ்காணும் கட்டுரை '*திருச்சபையின் வாழ்விலும் மறைபரப்புப் பணியிலும் கடவுளின் வாக்கு*' எனும் அகில உலக ஆயர்கள் பேரவைக்குப் பின்னர் ***திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்*** அவர்கள் வழங்கிய திருத்தந்தையின் '***ஆண்டவரின் அருள்வாக்கு' (Verbum Domini)*** எனும் ஏட்டில் '***திருச்சபையில் விவிலியப் பொருள்கோள்முறை***' என்ற பிரிவின் அடிப்படையில் அமைந்துள்ளது.

நாம் திருவிவிலியத்தை வாசிக்கும் போதும் அதைப் புரிந்துகொள்ள முயலும் போதும், இதில் கத்தோலிக்கருக்கென்று தனித்தன்மை உண்டா என்று நாம் கேட்கலாம். கடவுளின் வார்த்தையைப் புரிந்து அதை நம்முடைய அன்றாட வாழ்வில் கொண்டுவர முயல்கையில், நாம் எவ்வாறு கடவுளின் வார்தையை அணுக வேண்டும்?

***திருவிவிலியம் - திருச்சபையின் வாழும் (இறைச்சமூகத்தின்) குழுமத்தின் திருநூலாகும்***

திருவிவிலியத்தைப் புரிந்து கொள்ளவும் அதற்குப் பொருள்விளக்கம் தருவதற்கும் முயல்கையில், '*திருவிவிலியம் கடவுளின் மக்களால் கடவுளின் மக்களுக்காகத் தூய ஆவியாரின் இறைத்தூண்டுதலில் எழுதப்பட்டது*' என்று நாம் நினைவுகூர வேண்டும். இதிலிருந்து, கடவுளின் மக்களோடுக் கொள்ளும் உறவில் மட்டுமே கடவுள் தாமே விரும்பி வெளிப்படுத்தும் உண்மையின் ஆழத்திற்குள் (இதயத்தை) நுழைய முடியும் என்பதை நினைவுகூர வேண்டும். ஆம், நம்முடையத் தனிப்பட்ட வளர்ச்சிக்காக விவிலியத்தை வாசிக்கலாம், ஆனால் விவிலியம் கடவுளின் மக்களுடைய வாழ்வின் அனுபவங்களிலிருந்து வந்தது என்ற உண்மையை எப்பொழுதுமே நினைவுகூர வேண்டும். அதில் உள்ள இறைச்செய்தியைத் தூய ஆவியால் வழிநடத்தப்படும் இறைச்சமூகத்தின் கண்ணோட்டத்தில் தான் பார்க்க வேண்டும். இந்தத் தூய ஆவியாரே இறைச்சமூகமாக ஒன்றுகூடிவருவதற்கும் காரணம் என்றும் அவரே மனுக்குலத்திற்கு அதை கடவுளின் வார்த்தையாக (இறைவாக்காக) தொடர்ந்து வழங்கி வருகின்றார் என்றும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் பழைய ஏற்பாடு என்று அழைக்கும் யூத மறைநூலை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மானிடப் பிறப்பு, வாழ்வு மற்றும் பணி (குறிப்பாக, பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு) என்பவற்றின் ஒளியில் தான் திருச்சபை பொருள்விளக்கம் கண்டு வருகின்றது. இதே போன்றே, தொடக்கத் திருச்சபையின் தொடக்க நிலை அனுபவங்கள் மற்றும் விண்ணேற்றத்திற்குப் பிறகு இயேசுவோடு ஏற்படுத்திக் கொண்ட திருச்சபையின் அனுபவங்கள் புதிய ஏற்பாட்டு நூல்களாக உருவாகின. திருவிவிலியம் திருச்சபையிடமிருந்து வருகின்றது என்று புரிந்து கொள்ளப்பட்டது என்றால், கடவுள் வெளிப்படுத்த விரும்பிய விவிலியத்தின் உள்ளடக்கத்தையும் அதன் செய்தியையும் திருச்சபையோடு இணைந்து, திருச்சபையின் போதனைகளுக்கு ஏற்பவும் திருச்சபையின் ஆசிரியத்தின் வழிகாட்டுதலோடும் பொருள்விளக்கம் காண வேண்டும்.

**பொருள்கோள்முறைகள் (பொருள் விளக்கம் காணும் முறைகள்)**

திருவிவிலியத்தில் உள்ள பலவேறு பகுதிகளின் ஆழமிகுந்த உட்பொருளைப் புரிந்துகொள்ள பல்வேறு விவிலியப் பொருள்கோள்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. விவிலியத்தின் பொருள்கோள்முறை சமீப காலத்து ஆய்வுகளின் அடிப்படையில் வரலாற்று-விமர்சனப் பொருள்கோள்முறையை (Historico-critical) எந்த வகையிலும் தவிர்க்க முடியாது என்றும் அதைச் சார்ந்தே இருக்க வேண்டும் என்ற நிலைக்கும் வந்துள்ளது. இதே போன்றே ஏடுகள் பற்றிய பாடங்களின் ஆய்வு என்படும் 'ஏடுப் பகுப்பாய்வு' (Texual Analysis) விவிலியப் பொருள்கோள்முறையும் அதிகப் பலனைத் தந்துள்ளது. 'வரலாற்று-விமர்சனப்

பொருள்கோள்முறை' பல்வேறு வகையான இலக்கியங்கள் மற்றும் இலக்கிய வகைகள் போன்றவற்றைக் கருத்தில் எடுத்துக் கொண்டு, நிகழ்ச்சி நடந்த சூழலையும் கருத்தில் எடுத்துக்கொண்டு, அன்பிறகே இன்றையக் காலச் சூழலுக்கு ஏற்ப அப்பகுதியின் செய்தியைப் பொருத்திப் பார்க்கின்றது. எனவே, விவிலியத்தின் எந்தவொரு பகுதியையும் சரியான வகையில் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் வரலாற்று-விமர்சனப் பகுப்பாய்வு முறையின் பொருள்கோள் வழிமுறைகள் கட்டாயம் தேவை.

**அளவுகோல்கள்**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'இறைவெளிப்பாடு – அருள்வாக்கு' என்னும் கொள்கைத் திரட்டு விவிலியத்தின் இறைமைப் பண்பை மேன்மைக்குரியதாகப் பார்க்க மூன்று அடிப்படையான அளவுகோல்களை அடையாளம் காட்டியுள்ளது :

1. திருவிவிலியத்தின் ஒரு பகுதிக்கு விளக்கம் தர முயலும் போது, ஒட்டுமொத்த மறைநூலின் முழுமையைக் கருத்தில் எடுத்துக் கொண்டுதான் பொருள்விளக்கம் காண வேண்டும். இவ்வாறு எந்தவொரு விவிலியப் பகுதியையும் மறைநூலின் முழுமையிலிருந்து தனித்ததொன்றாகப் பார்க்கக் கூடாது.
2. திருவிவிலியத்தின் நிகழ்ச்சி ஒட்டுமொத்த திருச்சபையின் வாழும் மரபிலிருந்து எடுக்கப்பட்டதாகவே அமைந்திருக்க வேண்டும். மேலும் காலத்தைக் கருத்தில் கொண்டு விவிலியப் பகுதியைத் தனித்தனியாகப் பார்க்காமல், தொடக்கத் திருச்சபையின் காலத்திலிருந்து அது எவ்வாறெல்லாம் கண்ணோக்கப்பட்டுள்ளது என்று அறிந்து கொள்ள வேண்டும்.
3. நம்பிக்கையின் ஒப்புமைக்கு (நம்பிக்கை சார்ந்தவற்றிற்கு) மதிப்பு வழங்கப்பட வேண்டும். எந்தவொரு விவிலியப் பகுதியையும் விசுவசத்திற்கும் திருச்சபையின் போதனைக்கும் எதிராக பார்க்கப்படவே கூடாது.

**திருவிவிலிய விளக்கமும் இறையியலும்**

வரலாறு என்பது கடவுள் செயல்படும் அரங்கமாகும். எனவே, அது விசுவாசத்தின் ஒளியிலும் பகுத்தறிவின் ஒளியிலும் தான் பொருள்விளக்கம் காணப்பட வேண்டும். திருவிவிலிய விளக்கம் அல்லது பொருள்கோள்முறை இறையியலோடு கரம்கோர்த்தே எப்பொழுதும் பயணிக்க வேண்டும். இவ்வாறு பகுத்தறிவு கண்டுகொள்ளப்படாத நிலைக்கோ அல்லது அனைத்தையும் ஆன்மிகப்படுத்தும் போக்கிற்கோத்த அடிப்படைவாத நிலைகளைத் தூக்கிப் பிடிக்கும் தீவிர அகநிலை மற்றும் தன்னிச்சையான நிலைக்கு ஏற்றவாறு எழும் போக்குகளைத் தவிர்க்க முடியும். நாம் ஒவ்வொரு விவிலியப் பகுதியை அதன் நேர்பொருள் உட்கருத்திலிருந்து (Literal sense) எப்பொழுதும் பார்க்கும் போது, அந்த நேர்பொருள் உட்கருத்திலிருந்து எழும் ஆன்மிக உட்கருத்தை (Spiritual sense) இயல்பாக எழுவதைக் காண வேண்டும். மாறாக, வரிந்து கட்டிக் கொண்டு, அதற்கு ஆன்மிகப் பொருளைத் திணிக்கக்கூடிய வகையிலோ அல்லது தப்பறையான போதனைக்கோ வழிவகுத்துவிடக்கூடாது. ஆன்மிக உட்கருத்து என்பது நாம் வாசிக்கும் விவிலியப் பகுதியானது வெளிப்படுத்தும் பொருளாகும். இது தூய ஆவியாரின் வழிநடத்தலில் இயேசு கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் பின்னணியிலும் அதிலிருந்து புறப்படும் புதிய வாழ்வின் பின்னணியிலும் கண்ணோக்க வேண்டும். எனவே, விவிலியத்திற்கு விளக்கம் காண்பது என்பது நம்முடைய தனிப்பட்ட மற்றும் வாழும் விசுவாசத்திற்கு உட்பட்டதாக அமைய வேண்டும். இவ்வாறு, பொருள்விளக்கம் காணும் முறையானது விவிலிய மரபின் வரலாற்றுக் கூறுகளைக் கருத்தில் எடுத்துக் கொண்டும் இன்றையச் சூழலால் வாழும் விசுவாசிகளின் வாழ்விற்கு ஏற்ப மறைநூலின் வாழும் பொருளையும் காண்பதற்கான முயற்சியாகும்.

இந்த முடிவுக்கு, பொருள்கோள்முறையானது வார்த்தை அளவிலிருந்து ஆவியின் நிலைக்குக் கடந்து போக வேண்டும். கடவுளின் வார்த்தையை ஒரு குறிப்பிட்ட பகுதியின்

வடிவங்களுக்குள் (மொழிக் கூறுகளுக்குள்) வைத்து சமநிலைப்படுத்திவிடக் கூடாது. பொருள்கோள்முறையின் உண்மையான அணுகுமுறை என்பது அறிவுசார்ந்த அணுகுமுறையாக ஒருபோதும் இருந்துவிட முடியாது, மாறாக, அது வாழும் நிலை சார்ந்தது. இது தூய ஆவியாருக்கு ஏற்ப (கலா 5:16) திருச்சபையின் வாழ்வில் முழுமையாகப் பங்களிப்புத் தருவதில் அமைந்துள்ளது.

**ஆபத்துக்கள்**

திருவிவிலியத்தை வரலாற்று நூலாக மட்டும் கண்ணோக்கி, இன்றைய நிகழ்கால வாழ்வுக்கும் ஏற்றதாகப் பார்க்காமல், கடந்த காலத்தை மட்டும் பார்க்கக் கூடியது எனக் கருதும் ஓர் ஆபத்து உள்ளது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

அதே போன்று, மற்றொரு ஆபத்தும் உள்ளது. அதாவது, திருவிவிலியத்தை விசுவாசக் கண்கள் கொண்டுப் பார்க்காமல் உலகியியல் போக்குக் கொண்டு அணுகுவதும் ஆபத்தாகும். எடுத்துக்காட்டாக, கடவுளின் இறைமைக் கூறு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் போது, அதை மனித கூற்றறுக்குச் சுருக்கி பொருள்விளக்கம் தருவதற்கும் வாய்ப்புண்டு. இவ்வாறு செய்கையில், இறையியல்பின் வரலாற்றுக் கூற்றை மறுக்கிறோம் என்பது பொருளாகும். இவ்வாறு, செய்வது திருச்சபையின் வாழ்விற்கும் ஆபத்தை விளைவிக்கும். இவ்வகையானப் போக்கு கிறிஸ்தவத்தின் மறைபொருள்கள் மற்றும் அவற்றின் வரலாற்றுக் கூறுகளையும் குறித்த ஐயங்களை ஏற்படுத்தும் வகையில் காரணியாக அமைகின்றது.

எனினும், பொருள்கோள்முறை அல்லது விவிலிய விளக்கம் குறித்து இவ்வாறு நினைவுகூற வேண்டியது அவசியமாகும் : ‘விவிலிய விளக்கம் விவிலியப் பகுதிகளின் உண்மையான நோக்கத்திற்கு உகந்தாக இருக்கையில், அப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விசுவாசத்தின் உண்மையை அறிவதற்கான உருவாக்கத்தின் உள்ளாழத்திற்கு மட்டுமன்று இந்த உண்மையை நம்முடைய நிகழ்கால உலகத்தில் விசுவாச அனுபவத்தோடும் இணைத்துப் பார்க்கின்றது’ (ஆண்டவரின் அருள்வாக்கு 123). கடவுளின் வார்த்தை ஆற்றல்மிக்கதும் உயிருள்ளதுமாக உள்ளது. இதனால் இவ்விறைவார்த்தை இங்கும் நம்முடைய வாழ்வின் எல்லாக் காலத்திற்கும் ஏற்ற வகையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள இணக்கம் (தொடர்பு)**

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கும் இடையே உள்ளத் தொடர்பையும் நம் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைக் கடவுளின் வார்த்தையாக அங்கிகரித்துள்ளது. இவ்வாறு யூத மக்களின் மறைநூலின் அதிகாரத்தை ஏற்கின்றது. புதிய ஏற்பாடு அடிக்கடி பழைய ஏற்பாட்டின் மொழிநடையையும் பயன்படுத்தி பழைய ஏற்பாட்டு விவிலியப் பகுதிகளோடுத் தொடர்புடையதாகவும் காட்டுகின்றது. புதிய ஏற்பாடு தன் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு பகுதிகளை மேற்கோள்களாக எடுத்தியம்பி அதை உறுதிப்படுத்துகின்றது. புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டினை நிறைவு செய்கின்றது என்பதை அறியும் அதே வேளையில் கீழ்காணும் வகையில் தான் கண்ணோக்க வேண்டும்.

- தொடர்ச்சி சார்ந்த ஓர் அடிப்படையான அம்சம் : புதிய ஏற்பாட்டில் உருவகங்களைப் பயன்படுத்தும் நிலையில், தொடர்ச்சிக்குரிய ஓர் அடிப்படையான கூறு உண்டு என்று காண வேண்டும். எபி 11:17-19 கடவுளுக்கு ஈசாக்கைப் பலியிடுவது பற்றியும் அவனை மீண்டும் பெறுவதைப் பற்றியும் எடுத்தியம்புகின்றது. இறைவசனம் 19 ‘இறந்தோரைக் கடவுள் உயிரோடு எழுப்ப வல்லவர்’ என்று கூறுவதன் அடிப்படையில், கடவுள் ஈசாக்கிற்கு உயிர் தந்தது

இயேசுவின் பலிக்கும் அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுவதற்கு ஓர் முன்உருவகமாக அமைந்துள்ளது.

- தொடர்பின்மை சார்ந்த ஒரு அம்சம் : பழைய ஏற்பாட்டு (சமய மற்றும் சமூக) அமைப்புக்களோடு உள்ள தொடர்பின்மை. எடுத்துக்காட்டாக, எபிரேயர் திருமுகம் எடுத்தியம்பும் இயேசு கிறிஸ்துவின் தலைமைக் குருத்துவம் பழைய ஏற்பாட்டு குருத்துவத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்று காண்கிறோம்.
- நிறைவேறலும் கடந்து செல்தலும் சார்ந்த ஒரு அம்சம் : புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு எவ்வாறு நிறைவேறுகிறது என்பதையும் அதையும் கடந்து எப்படிச் செல்கின்றது என்பதையும் லூக் 4:18-19-இல் எசாயா இறைவாக்கினரிடமிருந்து மேற்கோளாகக் காட்டுவதிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.

**கடினமான விவிலியப் பகுதிகள்**

நம்மைப் பாதிப்புள்ளாக்கும் அளவுக்கு வன்முறையும் அறநெறிவுப் பிறழ்வு (ஒழுக்கக்கேடு) சார்ந்த இருளான அல்லது கடினமான பகுதிகள் விவிலியத்தில் உள்ளன. இப்படிப்பட்ட சூழலில், விவிலிய வெளிப்பாடு என்பது தொடர்ந்து படிப்படியாகப் புரிந்துகொள்ளப்பட்டவையே என்பதை நாம் நினைவுகூற வேண்டும். கடவுளின் திட்டம் படிப்படியாகவே வெளிப்படுத்தப்பட்டது என்றும் மெல்ல மெல்லவே பல்வேறு தொடர் கட்டங்களில் தான் அவை நிறைவேறியது என்பதையும் அறிய வேண்டும். இஸ்ரயேல் மக்களிடம் காணப்பட்ட பலவீனங்களைப் பொருட்படுத்தாமல், கடவுள் அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை வழிநடத்திக் கற்பித்து பொறுமையாகச் செயல்பட்டார். நம் காலத்தில் உள்ளது போன்றல்லாது, வன்முறைகளும் படுகொலைகளும் கண்டிக்கப்படாத காலத்தில் இருந்த கலாச்சாரத்தையும் அறிநெறிக்கோட்பாடுகளையும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்த நிலையில், பல்வேறுபட்ட சூழல்களையும், ஏன் அதையும் கடந்த நிலையில் அப்பகுதியில் கடவுளின் செய்தியாக உள்ளவற்றைப் புரியவும் காணவும் விவிலிய வல்லுநர்களின் உதவியை நாட வேண்டும்.

**கிறிஸ்தவ ஒன்றிப்பு**

விவிலியத்திற்கு பொருள் விளக்கம் காணுதல் என்பது மற்ற கிறிஸ்தவர்களோடுக் கொண்டுள்ள உறவுகளையும் உள்ளடக்கியதாகும். கிறிஸ்தவ ஒன்றிப்பியக்கம் மீட்ருள முயறுலும் கடவுளின் மக்களாக ஒன்றிணைதல் என்பது அடிப்படையில் மறைநூல் சார்ந்தது. திருவிவிலியத்திற்குச் செவிமடுத்தல், அதைப் பகிர்தல் மற்றும் அதைத் தியானித்தல் போன்றவை வழியாக, முழுமையற்ற ஆனாலும் உண்மையான இறைச்சமூக ஒன்றிப்பை அனுபவிக்கிறோம். இத்தகைய உண்மை நம்மை அன்பான உரையாடலைத் தொடரச் செய்யவும் உண்மையான உரையாடலில் தொடர்ந்து வளரவும் ஊக்கமளிக்கின்றது.

**முடிவுரை**

முடிவாக, கடவுளுடைய வார்த்தையை வாழ்ந்து காட்டியவர்கள் என்ற நிலையில் புனிதர்கள் நம்முடைய வாழ்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கிறார்கள். அவர்கள் அனைவருமே கடவுளின் வார்த்தையால் தங்களை உருவாக்கிக் கொண்டு, செவிமடுத்தல், வாசித்தல் மற்றும் தியானித்தல் வழியாக, கடவுளின் விதைவிதைப்போன் இறைவார்த்தை என்னும் விதையை விதைக்கத் தங்களையே நல்ல நிலமாக வளைத்துக் கொண்டவர்கள்.

இறைவார்த்தை நமக்குள் புனிதத்தின் கனிகளை 'முப்பது மடங்கு, அறுபது மடங்கு, நூறுமடங்காகப் பலன்' தருவதாக (மாற் 4:20).

**சிந்திக்கச் சில கேள்விகள்**

1. நான் கத்தோலிக்கராக இருந்து விவிலியத்திற்கு பொருள்விளக்கம் தருவது எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?
2. இந்த ஞாயிறுக்குரிய வாசகங்களை எடுத்துக் கொள்வோம். முதல் வாசகத்திற்கும் நற்செய்திக்கும் உள்ள தொடர்பு என்ன?
   இரண்டுக்குமிடையே உள்ள அ) தொடர்பு, ஆ) தொடர்பின்மை, இ) நிறைவேறுதல் போன்ற கூறுகளை உங்களால் அறிய முடிகின்றதா?
3. திருவிவிலியத்தில் காணப்படும் கடினமான பகுதிகளை நான் எவ்வாறு அணுகுகிறேன்?

மொழிபெயர்ப்பு : முனைவர் அருட்திரு. இரா. மரிய டெல்லஸ்

பொதுச் செயலர்

தமிழக விவிலியப் பணிக்குழு, திண்டிவனம் - தமிழ்நாடு (dellusrayy@gmail.com)